**செ. கு. எண்: 120** **நாள்:23.05.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 23.5.2013

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், தடிக்காரன்கோணம் கிராமம், அரசு ரப்பர் கழக மணலோடை கோட்டத்திற்குட்பட்ட காளிகேசம் பிரிவு அரசு ரப்பர் கழகத்தில் பால்வடிப்பு தொழிலாளராகப் பணி புரிந்து வந்த திருமதி பேபி என்பவரை 7.5.2013 அன்று காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், சாத்தனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. மதனகிரியப்பா என்பவரின் மகன் முனியப்பா 12.5.2013 அன்று சாத்தனூரிலிருந்து வண்ணாட்டி செல்லும் பாதையில் காட்டு யானை தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காட்டு யானைகள் தாக்கியதில் அகால மரணமடைந்த பேபி மற்றும் முனியப்பா குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த பேபி மற்றும் முனியப்பா குடும்பங்களுக்கு வனத் துறை மூலம் தலா மூன்று லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**